Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC .No. 68/2020**

**Deposition of PW. 10 (LW.13)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜாராம் | ஜாதி | : | |
| த/பெ | : | திருமலைச்சாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கன்னிவாடி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2026.

( 2, 4 வது எதிரிகள் ஆஜர். 1, 3, 5, 7, 9, 10, 11, 14 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது. 6, 8, 12, 13 வது எதிரிகள் இறந்துவிட்டார்கள்.)

**முதல் விசாரணை**

நான் கன்னிவாடி, ரெட்டியார்பட்டியில் குடியிருந்துகொண்டு வழக்கறிஞராக பணிபுரிந்து தற்போது விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக பன்றிமலை கிராமம், K hills ல் சுமார் 60 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 4 1/2 ஏக்கர் சர்வே எண்.48 ல் கட்டுப்பட்ட நிலத்தில் இளவம்பஞ்சு மரங்கள், எலுமிச்சை மரம், தானாக வளர்ந்த தோதகத்தி மரங்கள், பலா மரம், குமிழ் மரங்கள் ஆகிய மரங்கள் உள்ளன. அதை எனது தோட்டத்தில் வேலை பார்க்கும் தெய்வேந்திரன் மற்றும் சில நபர்களை வைத்து பராமரித்து வந்தேன். கடந்த 27.02.2004 ஆம் தேதி எனது தோட்டத்தில் காவல்காரர் தெய்வேந்திரன் என்பவர் எனக்கு தொலைபேசி மூலமாக சில நபர்கள் எனது நிலத்தில் தானாக வளர்ந்த தோதகத்தி மரங்களை வெட்டிக்கொண்டிருப்பதாக சொன்னார். நான் உடனே கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு சென்று எனது நிலத்தில் தானாக வளர்ந்த தோதகத்தி மரங்களை சில நபர்கள் வெட்டிக்கொண்டிருப்பதாகவும், அது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கும்

படி நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் நான் சம்பவ தினத்தன்று கன்னிவாடி வனச்சரக அலுவலரிடம் கொடுத்த புகார் மனு ஆகும். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.29/PW.10)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அங்கிருந்த கன்னிவாடி வனச்சரக அலுவலர் திரு. வடிவேல் அவர்கள் அது சம்மந்தமாக சிறப்பு விசாரணை குழுவினை செம்பட்டி வனச்சரக அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்டு அதில் வனவர் சேர்வராயன், சாமிக்கண்ணு, மகேந்திரன் மற்றும் சிலர் வனச்சரகத்தை சேர்ந்த அலுவலர்கள் சுமார் 6, 7 நபர்களுடன் நானும் எனது ஜுப்பில் அழைத்துக்கொண்டு சுமார் 04.00 மணியளவில் சம்பவ இடமான எனது தோட்டத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கு சென்று நாங்கள் பார்த்தபோது தோதகத்தி மரங்களை சுமார் 7 நபர்கள் வெட்டிக்கொண்டிருந்தார்கள். அந்த நபர்களை என்னுடன் வந்த வன அலுவலர்கள் பிடித்தார்கள். அவர்கள் பயன்படுத்திய கோடாரிகள், ரம்பம், அறுவாள் ஆகியவற்றை வைத்திருந்தார்கள். அங்கு அந்த நபர்களை வன அலுவலர்கள் பிடித்த பின்பு வெட்டி சாய்க்கப்பட்ட தோதகத்தி மரங்களில் செதுக்கி வெட்டிய 28 ம், செதுக்காமல் இருந்த உருட்டுக்கட்டைகள் 2ம் இருந்தன. அந்த கட்டைகளை கைப்பற்றி அதை என்னிடம் கொடுக்கும்பொழுது அதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், கையெழுத்து போட்டேன். அந்த பார்வைமகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.30/PW.10)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கட்டைகள் என்னுடைய உடைமையில் தான் இருந்தது. அந்த கட்டைகளை என்னிடம் ஒப்படைத்தார்கள்.

அதன்பின்பு வன அலுவலர்கள் அந்த நபர்களை அழைத்துக்கொண்டு சென்றார்கள். நானும், எனது தோட்டத்து காவல்காரரும் கன்னிவாடி வனச்சரக அலுவலகம் சென்றோம். கடந்த 29.02.2004 ஆம் தேதி மறுபடியும் சம்பவ இடத்தை பார்வையிட வேண்டும் என சொல்லி வனச்சரக அலுவலர்கள் அங்கு வந்தார்கள். புதருக்குள் இருந்த 5 கட்டைகளை எடுத்து என்னிடம் ஒப்படைத்தார்கள். 29 ஆம் தேதி ஒப்படைத்தார்கள். அதை நான் பெற்றுக்கொண்டதற்காக அதில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். அந்த ஒப்புதல் கடிதம் **(அ.சா.ஆ.31/PW.10)** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. அதன்பின்பு 02.05.2004 ஆம் தேதி வனச்சரக அலுவலருக்கு கிடைத்த தகவலின் பேரில் செதுக்கப்பட்ட 2 கட்டைகளை சம்பவ இடத்தில் வைத்து என்னிடம் ஒப்படைத்தார்கள். அந்த ஒப்புதல் கடிதம் ஏற்கனவே அ.சா.1 மூலம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் போடப்பட்டுள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.32/PW.10)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் கடிதம் கடந்த 27.02.2004 ஆம் தேதி 28 செதுக்கப்பட்ட கட்டைகள், 2 உருட்டுக்கட்டைகளை பெற்றதற்கான ஒப்புதல் கடிதம் ஆகும். அந்த ஒப்புதல் கடிதம் ஏற்கனவே அ.சா.1 மூலம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் போடப்பட்டுள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.33/PW.10)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்பு இது சம்மந்தமாக வழக்கு நடக்கும்பொழுது என்னை அழைப்பதாக சொன்னார்கள்.

**14வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் எங்கு குடியிருந்து வருகிறீர்கள் என்றால் ரெட்டியார்பட்டி, கன்னிவாடியில் குடியிருந்து வருகிறேன். எந்த தேதியில் உங்கள் தோட்டத்து பண்ணையாள் உங்களுக்கு போன் செய்து தகவல் சொன்னார் என்றால் 27.02.2004 அன்று தகவல் சொன்னார். அந்த தகவலின் உண்மை தன்மையை நீங்கள் நேரில் சென்று தெரிந்துகொள்வதற்கு முன்பாகவே கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் நீங்கள் புகார் அளித்தீர்கள் என்றால் சரிதான். எந்த சர்வே எண்ணில் மரங்களை வெட்டிக்கொண்டிருந்தார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு கொடுக்கவில்லை என்றால் அந்த நேரத்தில் நான் குறிப்பிட்டு கொடுக்கவில்லை. அதன்பின்பு என்னை விசாரிக்கும்போது கூறியுள்ளேன். வனச்சரக அலுவலர் உங்களை விசாரிக்கும் போதும் எந்த எந்த சர்வே எண்ணில் எந்த எந்த மரங்கள் வெட்டப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பார்த்தால் தான் தெரியும் என்பதால் மரங்களையும், சர்வே எண்களையும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை.

உங்கள் நிலத்தில் எந்த எந்த சர்வே எண்களில் எந்த எந்த மரங்கள் எவ்வளவு எண்ணிக்கையில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் 50, 60 ஏக்கர் நிலத்தில் உள்ள மரங்களை என்னால் நியாபகம் வைத்து சொல்ல முடியவில்லை. மரங்களை யார், யார் நேரடியாக வெட்டினார்கள் என்று

உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சதுர்ப்பு செய்த கட்டைகளை எந்த தேதியில் நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் என்றால் அதே தேதியில் பெற்றுக்கொண்டேன். 11 வது எதிரியின் நிலத்தில் வெட்டப்பட்ட கட்டைகளையும் இந்த வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நீங்கள் குறிப்பிட்ட தேதியில் புகார் கொடுக்கவில்லை என்றும், பின்னிட்டு வனச்சரக அலுவலகத்தில் வைத்து தயார் செய்து புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் வனச்சரக அலுவலகத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக வனச்சரக அலுவலர் உங்களை எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 27.02.2004 அன்று விசாரித்தார்கள். அதற்குபின்னிட்டு 29.02.2004 அன்று விசாரித்தார்கள். என்ன நிபந்தனையில் பேரில் இவ்வழக்கு சொத்துக்களை உங்களிடம் ஒப்படைத்தார்கள் என்றால் வழக்கு நடப்பதால் மரங்கள் இந்த இடத்தில் இருக்கட்டும் என்று சொல்லி வைத்துவிட்டு சென்றார்கள். வேண்டும்போது அந்த மரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறினார்களா என்றால் இல்லை. தற்போது அந்த வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் வழக்கு சொத்துக்கள் மண்ணுக்குள் வைத்து புதைக்கப்பட்டுள்ளது.தற்போது என்ன நிலையில் உள்ளது என்று தெரியாது. நான் தற்போது விவசாயம் செய்வதில்லை.

எதிரிகள் தோதகத்தி மரங்களை உண்மையில் வெட்டியிருந்தார்கள் என்றால் அந்த மரங்களை நீதிமன்றத்திலோ, வனச்சரக அலுவலகத்திலோ ஒப்படைத்திருப்பீர்கள் என்றும், அவ்வாறு உண்மையில் மரங்கள் வெட்டப்படாததால் தான் அந்த மரங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. மரங்களை பெற்றுக்கொள்வதற்காக எதுவும் மனு செய்தீர்களா என்றால் DFO அலுவலகத்தில் நான் மனு செய்திருந்தேன், ஆனால் அவர்கள் அனுமதி கொடுக்கவில்லை. DFO அலுவலகத்தில் கொடுத்ததாக சொல்லும் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், மனு கொடுத்ததாக வனச்சரக விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான்.

உங்கள் நிலத்தில் அரிய வகை மரங்கள் வளர்வதாக கிராம நிர்வாக அலுவரிடம் சான்று எதுவும் வாங்கியுள்ளீர்களா என்றால் சான்று யாரும் கொடுப்பதில்லை. வெட்டப்பட்தாக சொல்லப்படும் மரங்களுக்கு கிஸ்தி வரி

செலுத்தியுள்ளீர்களா என்றால் நிலத்திற்கு மட்டும் தான் செலுத்தியுள்ளேன், மரங்களுக்கு இல்லை. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் வனச்சரக விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். சொத்துக்கள் யாருடைய பெயரில் உள்ளது என்றால் 7 நபர்கள் பெயரில் உள்ளது. 7 நபர்களின் பெயரில் உள்ள விபரத்தை வனச்சரக அலுவலர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் என் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட இடம் என்று சொல்லியுள்ளேன்.

உங்களுக்கு 50, 60 ஏக்கர் நிலம் உள்ளதாக முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை புகாரிலோ, வனச்சரக அலுவலர் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவர்கள் கேட்கவில்லை, நான் கூறவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எத்தனை கையெழுத்து செய்துள்ளீர்கள் என்றால் எனக்கு நியாபகமில்லை. மரங்கள் எந்த தேதியில் வெட்டப்பட்டது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். வனச்சரக அலுவலர்களை உங்கள் ஜுப்பில் அழைத்துச் சென்றதாக சொன்ன விபரத்தை புகாரிலோ, வனச்சரக அலுவலர் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

50, 60 ஏக்கர் நிலம் உங்கள் பெயரில் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு பட்டா எதையும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் வனச்சரக அலுவலர்களிடம் கொடுத்துள்ளேன். 50, 60 ஏக்கர் நிலங்களை தவிர வேறு நிலங்கள் உள்ளதாக என்றால் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சுமார் 200 ஏக்கர் நிலங்கள் உள்ளன. சம்பவம் நடந்த இடத்திற்கு நான்கு மால்கள் குறிப்பிட்டு புகார் தரவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன 200 ஏக்கர்களுக்கு பட்டா, பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. உங்கள் காவலாளி எந்த தேதியில், எத்தனை மணிக்கு எதன் மூலம் உங்களுக்கு தகவல் சொன்னார் என்றால் 27.02.2004 அன்று இரவு 11.00 மணிக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னார். வேலுப்பிள்ளை வீட்டில் இருந்து அவருடைய தொலைபேசியில் இருந்து எங்கள் வீட்டு தொலைபேசிக்கு தகவல் சொன்னார்.

உங்கள் வீடு எங்கு உள்ளது என்றால் ரெட்டியார்பட்டி, கன்னிவாடியில் உள்ளது. தகவல் கிடைத்தபோது நீங்கள் எங்கு இருந்தீர்கள் என்றால் என் வீட்டில் இருந்தேன். தகவல் கிடைத்தவுடன் எவ்வளவு நேரம் கழித்து சென்றீர்கள் என்றால் அரை மணி நேரம் கழித்து சென்றேன். நீங்கள் புகார் கொடுத்தபோது யார் இருந்தார் என்றால் பிச்சை, சேர்வராயன், சாமிக்கண்ணு ஆகியோர்கள் பெயர் தான் எனக்கு தெரியும், மற்ற நபர்கள் இருந்தார்கள் அவர்கள் பெயர் எனக்கு தெரியவில்லை.

வெட்டிய மரங்களை எந்த தேதியில் குழி தோண்டி புதைத்தீர்கள் என்றால் எனக்கு சரியாக நியாபகமில்லை. நான் ஏற்கனவே அங்கு செல்ல முடியாது என்பதால் தான் காவலாளியை வைத்திருந்தேன். தோதகத்தி மரங்களை குழி தோண்டி புதைத்தாலும் அதன் தன்மை மாறாது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நீங்கள் உண்மையில் தோதகத்தி மரங்களை புதைக்கவில்லை என்றும், நீங்கள் அந்த மரங்களை எடுத்து பயன்படுத்தி விட்டதால் தான் மரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தோதகத்தி மரங்களை உங்கள் சொந்த பயன்பாட்டுக்காக வெட்டிவிட்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

சம்பவம் நடைபெற்றது உண்மையா இல்லையா என்று தெரியாமலும், எதிரிகள் யார் என்று நேரில் சென்று தெரிந்துகொள்ளாமலும் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு 200 ஏக்கர் நிலம் உள்ள நிலையில் நீங்கள் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தால் சர்வே எண் மற்றும் நான்கு மால்களை குறிப்பிட்டு புகார் கொடுத்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் காவலாளிக்கு எந்த தேதியில் மரம் வெட்டப்பட்டது என்று தெரியாது என்றும், அவர் சொன்ன தகவலின் அடிப்படையில் நீங்கள் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அவர் பார்த்தவுடன் எனக்கு தகவல் சொல்லிவிட்டார்.

நீங்கள் கொடுத்த புகார் மனுவில் காவலாளி உங்களுக்கு தகவல் கொடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தகவல் கிடைக்கப்பட்டது என்று நான் சொன்னேன். நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், பொய்யான புகாரின் அடிப்படையில் வனவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**2, 3, 4, 5, 7, 9, 10, 11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1வது எதிரியின் வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை 2, 3, 4, 5, 7, 9, 10, 11 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஏற்றுக்கொள்கிறார்.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM, Athoor
Athoor